மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

OS.No.34/2015

2024–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார்(Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.25.11.2024

வா.சா.1

**2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் இந்த வழக்கில் 2 வது இலக்க சொத்தில் 1 ம் பிரதிவாதி 9 செண்ட் நிலத்தில் பிவேர் பிளாக் சாலை அமைக்க முயற்சி செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த சாலை அமைத்த இடம் சர்வே எண்.240/2 ல் உள்ளது அதில் எங்களுக்கு பாத்தியமானது அந்த சாலையை அகற்றுவதற்கு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம்கோரியுள்ளேன் என்றால் சரிதான். மண்டபம் யாதவர் தெரு மாரியம்மன் கோவில் நான்கு திசையிலும் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். எல்லா பக்கங்களிலும உள்ளவர்கள் அந்த பிவேவர் பிளாக் சாலை வழியாக போய் வருகிறார்கள் என்றால் சரிதான். அந்த சாலையில் ஆரம்பத்தில் தார்ச்சாலையாக இருந்து பின்பு சிமெண்ட் சாலை போட்டு தற்போது பிவேவர் பிளாக் போட்டு பயன்படுத்திவருகிறார்கள் என்றால் சரியல்ல. மண்டபம் சர்வே எண்.240/2 என்பது சுதந்திரத்திற்கு முன்பு இராமநாதபுரம் சேதுபதி மன்னர் ஆடசியிலும், சுதந்திரத்திற்கு பின்பு மாநில அரசு அதிகாரத்திற்குட்பட்டும் வருவாய் ஆவணங்களில் அரசுபுறம்போக்கு வண்டிப்பாதை மற்றும் வட்டக்கிணறு என வகைப்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல சொல்லப்படவில்லை. சமஸ்தான காலத்தில் இருந்து உள்ள வண்டிப்பாதையை மண்டபம் பேரூராட்சி சாலை அமைப்பதை எனக்கோ, எனது குடும்பத்தினருக்கோ தடுப்பதற்க எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. எங்களது கிரைய பத்திரத்தில் எங்களுடைய விஸ்தீரணத்திற்கு வெளியேதான் வண்டிப்பாதையும், வட்டக்கிணறும் உள்ளது. மண்டபம் கிராமம் சர்வே எண்.240 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் தெரியாது. சர்வே எண்.240/1, 240/2 என பிரிக்கப்பட்டு உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.240 க்கு மொத்த விஸ்தீரணம் 42 செண்ட் என்றால் சரிதான். அதில் 240/1 க்கு 31 செண்ட் என்றால் சரிதான் தவறாக உட்பிரிவு செய்துள்ளார்கள். 240/2 க்கு 11 செண்ட் என உட்பிரிவு

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.11.25 18:10:02 +0530

செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 240/2 எவ்வாறு நிலத்தில் அமைந்துள்ளது என்பதை காண்பிப்பதற்கு புல வரைபடத்தின் சான்றிட்ட நகல் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அந்த புலவரைபடத்தை எங்கள் தரப்பில் குறியீடு செய்துள்ளீர்களா என்றால் இல்லை ஆணையர் தாக்கல் செய்துள்ளார். 240/2 ல் உள்ள 11 செண்ட் என்பது மாரியம்மன் கோவில் வண்டிப்பாதை, வட்டக்கிணறு என்றால் சரியல்ல கிழகத்து பக்கம் உள்ளது. மாரியம்மன் கோவிலும், அதனை சுற்றி பிவேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டுள்ள பகுதியும் சேர்ந்து புல எண்.240/2 ல் உள்ளது என்றால் சரியல்ல. மாரியம்மன் கோவிலுக்கு வாசல் கோவிலுக்கு வடபுறம் என்றால் சரிதான். அதற்கும் வடக்கே சுமார் 30 அடி துாரத்தில் பொது வட்டக்கிணறு உள்ளது அதில் இருந்துதான் குடிமக்கள் தண்ணீர் எடுத்து பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான் அது எங்கள் இடத்திற்குவெளியே உள்ளது. அந்த வட்டக்கிணறும், சர்வே எண்.240/2 ல் தான் உள்ளது என்றால் சரியல்ல. கிணறில் இருந்து தண்ணீர் எடுத்து செல்லும் பொதுமக்கள் மாரியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள பிவேவர் சாலை வழியாக தான் சென்றுவருகிறார்கள் என்றால் சரிதான். பிவேவர் சாலை அமைப்பதற்கு முன்பு சிமெண்ட சாலை, தார்ச்சாலை அமைக்கும்போது மண்டபம் பேரூராட்சியால் தீர்மானம் போடப்பட்டது என்றால் சரிதான். அந்த பேரூராட்சி தீர்மானத்தை அனுசரித்துதான் மண்டபம் செயல் அலுவலர் 27.03.2015 தேதியில் ஒரு உத்தரவு போட்டார் அதன் பெயரில் ஒப்பந்ததாரர் பிவேவர் சாலை அமைத்தார் என்றால் அந்த உத்தரவுப்படி சாலை அமைக்க வேண்டிய இடத்தில் சாலை போடாமல் எங்கள் கிரைய பாத்தியமான சொத்தில் அத்துமீறி நுழைந்து காவல்துறையில் அனுமதியுடன் பிவேவர்பிளாக் சாலை போட்டுள்ளார். அந்த சாலை அமைக்கும் பணிக்கு 2014–2015 காலத்தில் ரூ.4,00,000/– ஒதுக்கீடு செய்து சாலை அமைத்த ஒப்பந்ததாரரால் தகவல் எனக்கு சொல்லப்பட்டது என்றால் சரியல்ல. நான் அந்த ஒப்பந்ததாரரை தடுக்க முயற்சித்தும் பலனில்லாததால் மண்டபம் பேரூராட்சி மீதும், 2ம் பிரதிவாதி மீதும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல தடுக்க முயற்சித்தவுடன் அங்குள்ள ஆட்களுடன் எங்களை அடித்து காவல்நிலையத்தில் உள்ளே வைத்து சாலை போட்டார்கள். என்னை எத்தனை பேர் அடித்தார்கள் நான் புகார் கொடுத்தேனா அதற்கு வழக்கு போட்டார்களா என்றால் 23.06.2015, 02.07.2015, 17.07.2015 காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் நடவடிக்கை எடுக்கவில்லை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தேன் நடவடிக்கை எடுக்க சொல்லி உத்தரவு ஏற்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை அந்த ரிட் மனு உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மண்டபம் பஞ்சாயத்து தலைவர் தான் சாலை அமைத்துள்ளார் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பேரூராட்சி தீர்மானம் சிவகங்கையில்உள்ள மண்டல உதவி இயக்குநரின் நிர்வாக அனுமதி பெற்ற பின்பு 1ம் பிரதிவாதி செயல்படுத்தியுள்ளார். அவரை இந்த

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.25 18:10:09 +0530

வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் நான் படிப்பறிவு இல்லாததால் அவரை சேர்க்கவில்லை. 2ம் பிரதிவாதிக்கும், பிவேவர் பிளாக் சாலைக்கும் எந்த தொடர்பு இருப்பதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல்செய்துள்ளேன் இலவச சட்ட உதவியில் மனு கொடுத்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். 2ம் பிரதிவாதி அரசு ஒப்பந்ததாரர் பட்டியலில் இல்லை அதனால் அவரிடம் ரோடு ஒப்பந்தம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல அவர்தான் ரோடு போட்டார். எனது பிராது படி சர்வே எண்.240/2ல் அமைக்கப்பட்ட பிவேவர் பிளாக் சாலையானது வடக்கு பக்கம் கோவிந்தராஜ் மனைவி சரஸ்வதி வீட்டு வாசல் வரை உள்ளது என்றால் சரிதான் அப்போது கவுன்சிலராக இருந்தார் அவருக்காகத்தான் ரோடு போட்டார்கள். சரஸ்வதி வீட்டிற்கு தலைவாசல் தென்பக்கம் உள்ளது என்றால் தலைவாசல் இல்லை. நான் ராஜவேலுக்கு விற்ற வீட்டிற்கு வரவேண்டும் என்றால் பிவேவர் பிளாக் சாலை வழியாக வடக்கு பக்கமாக வந்து கிழக்கில் திரும்பவேண்டும் என்றால் தீர்மானம் போட்ட வாசுகிநாதனின் சந்து வழியாகத்தான் கோவிலுக்கு செல்வார்கள். 1968ம் கிரையம் பெற்ற எனது தகப்பனார் எந்த புல எண்ணில் உள்ள வீட்டில் வசித்து வந்தார் என்றால் சர்வே எண்.240/1ல் வசித்து வந்தார் தற்போது 240/8ல் வசித்து வருகிறோம். வீட்டின் கதவு எண்.15/60 ஆகும். நாங்கள் ராஜவேலுக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்திலும், வா.சா.ஆ.6, 8, 10 ஆகிய ஆவணங்களிலும் வீட்டின் கதவு எண்.11/77 என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வார்டு மாறும்போது கதவு எண் மாறும். எனது தகப்பனார் பெயரில் பட்டா ஏற்படவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் சொத்தை அனுபவத்தை காட்டுவதற்கு வீட்டு வரி ரசீது, நில வரி, மின் ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளோம். கதவு எண்.15/60க்கு வீட்டு வரி ரசீதில் எனது சகோதரர்கள் 5 பேர் பெயரிலும் 15.02.2001 தேதியில் வீட்டு வரி ரசீது செலுத்தப்பட்டுளளது என்றால் சரிதான். 11.07.2001ல் ராஜவேலுக்கு கிரையம் செய்து கொடுத்தபோது வீடு முற்றிலுமாக அழிமானமாகிவிட்டது என்று பத்திரத்தில் எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான் நாங்கள் சரியாகத்தான் எழுதிக்கொடுத்துள்ளோம். 11.07.2001க்கு பிறகு அந்த வீட்டிற்கு எந்த வரி விதிப்பும் ஏற்படவில்லை என்றால் சரிதான். கிரையம் வாங்கிய ராஜவேலு 1வது இலக்க சொத்தில் வெந்நிலமாக வைத்து பூச்செடிகள் வைத்து பராமரித்து வருகிறார் என்றால் இல்லை கிரையம் கொடுத்த பின்பு எனது சகோதரி பருதவர்த்தினி, சகோதரி காளீஸ்வரி அனுபவம் செய்துவருகிறார்கள். வா.சா.ஆ.23 வீட்டு வரி ரசீதுகளில் கதவு எண்.11/77 வீட்டு எண் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை வார்டு மாறியதால் தற்போது 17/55 என்று போடப்பட்டுள்ளது. எனது பிராதில் எனது வீட்டின் நம்பர் 15/60 என போட்டுள்ளேன் என்றால் சரிதான். 2வது இலக்க சொத்திற்கு போடப்பட்டுள்ளது. சர்வே எண்.240/1 எனது சொத்தில் பொய்யான வாதம் என்றாலும், 1வது இலக்க சொத்து 240/1 என்பது 1வது அயிட்ட சொத்திற்கு 180 அடி வடமேற்கில் உள்ளது என்றால் சரியல்ல. அந்த சொத்து இன்றைய வருவாய் ஆவணங்கள் படி நம்பு பிள்ளை

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.11.25 18:10:17 +0530

என்பவருக்கு பட்டா ஏற்பட்டு அவரது மகள் மகேஸ்வரி வீடு கட்டி வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனது தகப்பனார் வா.சா.ஆ.1 மூலம் 1968 ல் கிரையம் வாங்கும்போது 1 வது இலக்க சொத்தின் நான்கு எல்லைகளும் சரியாக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் 2 இலக்கசொத்துக்களையும் கிரையம் வாங்கும்போது புல எண்கள் குறிப்பிட்டு கிரையம் வாங்கினாரா என்றால் இல்லை நான்குமால் படி வாங்கினார். கிரையம் வாங்கிய பின்பு எனது தகப்பனார் உயிருடன் இருந்தவரையிலோ, அதன் பின்பு நாங்களோ வருவாய் துறையில் பட்டா கேட்டு மனு தாக்கல் செய்யவில்லை என்றால் கொடுத்துளளோம். லட்சுமி அம்மாள் உயிருடன் இருந்தபோது அவர் குடியிருந்து வந்த ஒரே ஒரு கூரைக்கோப்பு வீடு மட்டும் தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அப்போதுள்ள நான்குமால் படி சரியாக வாங்கியுள்ளார். அந்த வீட்டில் தான் எங்கள் குடும்பம் குடியிருந்து வந்தது என்றால் சரிதான். வா.சாஆ.13 கிரைய ஆவணத்தில் 2 வது இலக்க சொத்திற்கு அடுத்து கிழக்கில் ராஜைய்யா மகன் கோவிந்தக்கோனார் வீடும நிலமும் எல்கையாக உள்ளதாக எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் நான்கு எல்லைக்குள் உட்பட்ட பகுதியை அளந்து பார்த்து மொத்தம் 5 1/2 செண்ட் உள்ளது என்பது தெரிந்து தான் அந்த விஸ்தீரணத்தை போட்டு ராஜவேலுக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல (சாட்சி தானாக சொல்கிறார்)1999 ல் இரண்டு இலக்க சொத்துக்களை அடமானம் வைத்து 1 வது இலக்க சொத்தில் 5 1/2 செண்டை மட்டும கிரையம் செய்து கொடுத்தோம். ராஜவேலுக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு அந்த இடத்தில்ஒரே இடம் 5 1/2 செண்ட் மட்டும் தான் இருந்தது 2 வது இலக்க சொத்தான 9 செண்ட் அந்த இடத்தில் இல்லை என்றால் 1, 2 இலக்கசொத்துக்கள் இருந்ததால் தான் அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் சார்பதிவாளர் அலுவலகம் மூலமாக ஒத்தி, அடமானம் வைத்தார்கள். ஒத்தி வைத்ததாக வ.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3, வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.10 ஆகிய ஆவணங்களில் காட்டப்பட்டுள்ள இரண்டாவது இலக்க சொத்து பூமியில் இல்லாத சொத்து என்றால் சரியல்ல 1, 2 இலக்க சொத்துக்கள் பூஸ்திதியில் இருந்ததால் தான் பத்திர அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ளார்கள் ஆணையர் அறிக்கையிலும் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. எனது தகப்பனார் கிரையம் வாங்கிய 2 இலக்க சொத்துக்களும் பூஸ்திதியில் இருந்தது எனது குடும்பத்தார் அனைவருகும் தெரியுமா என்றால் தெரியும். என்னுடைய அண்ணன் மனைவி அழகம்மாள், எங்கள் குடும்பத்தினர் எல்லோர் மீதும பாகப்பிரிவினை வழககு இராமநாதபுரம் டி.மு கோர்டில் போட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் 1 வது இலக்க சொத்து ஒரே ஒரு சொத்தை மட்டும் தான் பாகப்பிரிவினை கோரியிருந்தார் நான் சொல்வது போல் 2 இலக்க சொத்துக்களும் இருந்திருந்தால் 2 இலக்க சொத்துக்களையும் வழககு தாக்கல் செய்திருப்பார் என்றால் 2 வது இலக்க சொத்தை விற்பனை செய்யாததால் அந்த வழக்கில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. எனது தகப்பனாரும், நானும் கிரையம் வாங்கியதில் இருந்து பட்டா வாங்காததற்கு ஒரே ஒரு

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.25 18:10:23 +0530

காரணம் தாவா 2 வது இலக்க சொத்து பூமியிலேயே இல்லை அதனால் வருவாய் துறை அதிகாரிகள் கண்டுபிடித்துவிடுவார்கள் என்பதால் பட்டா வாங்கவில்லை என்றால் சரியல்ல பூமியில் இருப்பதால் தான் ஆணையர் அறிக்கையில் பத்திரத்தில் உள்ளபடி இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.16 ஆனது எனது சகோதரி பருபதவர்த்தினி பட்டா கேட்டு 31.12.2013 தேதியில் வட்டாட்சியருககு அனுப்பிய மனு என்றால் சரிதான். அந்த தபால் எந்த தபால்நிலையத்தில் இருந்து அனுப்பப்பட்டது என்பதற்கு அஞ்சலக ரசீது உள்ளதா என்றால் இல்லை ஒப்புகை அட்டை உள்ளது. அந்த ஒப்புகை அட்டையில் 4 வது காலத்தில் எந்த தேதியில் அனுப்பபட்டது என்றும், எந்த அஞ்சல் நிலையத்தில் இருந்து அனுப்பபட்டது என்பதை பத்தி 20 லும், எந்த தேதியில் முகவரியாளருக்கு டெலிவரி செய்யப்பட்டது என்பதை பத்தி 29 லும் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது அந்த ஒப்புகை அட்டையில் அஞ்சலக முத்திரை எதுவும் இல்லை என்றாலும் சரிதான் அது அஞ்சலக தவறு அது உண்மையாக அனுப்பப்பட்டதால் தான் வட்டாட்சியர் கையொப்பம் செய்து வாங்கியுள்ளார். 31.12.2013 தேதியில் எனது சகோதரி தாசில்தாருக்கு மனு அனுப்பியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு 08.07.2015 தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால்சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.18 12.08.2015 தேதியில் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.16, வா.சா.ஆ.18 ஆகிய ஆவணங்களில் ஒரே வாசகங்கள், ஒரே வரிகள், எழுத்துக்கள் ஒரே மாதிரி கம்யூட்டர் டைப் செய்யப்பட்டுள்ளது இரண்டு ஆண்டு இடைவெளியில் அந்த மனுக்கள் அனுப்பப்பட்டுள்ளது என்றால் தவறு 2013, 2014 ல் அனுப்பியுள்ளோம். அனுப்பிய விபரத்தை 2018 மனுவில் சொல்லியுள்ளோம். வா.சா.ஆ.18 12.08.2015 தேதியில் அனுப்பப்பட்டதாக மனுவின் முதல் பக்கத்தில் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.18 ல் 2013, 2014 அனுப்பிய மனுக்ககளை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.18 ல் 12.08.2015 தேதி போட்டு மண்டபம் என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.18 ல் இரண்டாவது பக்கத்தில் தேதியை சுரண்டி இராமநாதபுரம் என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் நாங்கள் சரியாகத்தான் அனுப்பியுள்ளோம். வா.சா.ஆ.17 புகார் மனு இராமேஸ்வரம் டிஎஸ்பிக்கு எனது சகோதரி காளீஸ்வரி 02.07.2015 தேதி மற்றும் 18.07.2015 ஆகிய தேதிகளில் அனுப்பியது என்றால் சரிதான். அதில் அஞ்சலக ஒப்புதல் அட்டை வைத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஒப்புகை அட்டையில் 29 வது காலத்தில் 15.07.2004 தேதி போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது போஸ்ட் ஆபீஸ் தவறு ஆகும். 15.07.2004 தேதியில் டெலிவரி ஆன தபாலை எப்படி ஜூலை 2015 தேதியில் ஸ்பீடு போஸ்ட் மூலம் அனுப்ப முடியும் என்றால் முடியாது முதல் பக்கமும், பின் பக்கமும் 2015 என சீல் வைக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.19 எனது சகோதரி பர்வதவர்த்தினி இராமநாதபுரம் வட்டாட்சியருக்கு அனுப்பியது என்றால் சரிதான். அதில் சொத்தின் புல எண்ணோ, சொத்து விபரமோ, நான்கு எல்லையோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான் மனுவுடன்

S ILAIYARAJA
Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.25 18:10:30 +0530

சொத்து விபரங்களை எழுதிக்கொடுத்துள்ளேன். தாவா சொத்தை எனது கிரைய ஆவணங்களான வா.சாஆ.1, வா.சா.ஆ.2 நான்குமால் அளவு படி வருவாய் நில அளவையர் வைத்து ஸ்தலத்தை அளந்து நிர்ணயம் செய்யக்கோரி ஆணையர் நியமணம் மனு தாக்கல் செய்து ஆணையர் 26.02.2022ம் தேதி சொத்தினை பார்வையிட்டு தனது இறுதி அறிக்கையை 02.12.2023ம் தேதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** மற்றும் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆகும். ஆணையர் வா.சா.ஆ.1 ஆவணப்படி சொத்தினை அளவீடு செய்தபோது தாவா சொத்துக்கள் மண்டபம் குரூப் சர்வே எண்.240/2 என இருந்து வருவதாகவும், மாரியம்மன் கோவில் மேற்கு பகுதியில் பேரூராட்சி சாலை அமைந்துள்ளது என்றும் அறிக்கையில் தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். மாரியம்மன் கோவிலைச் சுற்றியுள்ள வீடுகளில் நாகுக்கோனார் வீடு, இருளப்பக்கோனார் வீடு, கோவிந்ராஜன் வீடு, உலகநாதன் வீடு, ராஜவேல் தோட்டம், கருப்பணசாமி கோவில் , கன்னியம்மன், ராக்கச்சியம்மன் கோ்வில், சௌந்தரவல்லிவீடு, புலஎண்.240/1ல் மகேஸ்வரி என்பவரது வீடு உள்ளதாகவும் வரைபடத்தில் காட்டி அறிக்கையில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல கருப்பணசாமி கோவில், கன்னியம்மன், ராக்கச்சியம்மன் கோ்வில், உலகநாதன் வீடு ஆகியவை எனது கிரைய பத்திரத்தில் இல்லை அதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளோம் சௌந்தரவல்லியை பொறுத்தவரை 2015ல் ஆக்கிரமித்துள்ளார் அதற்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளோம். ஆணையர் பார்வையிடும் போது 2வது இலக்க சொத்தில் எங்கள் வீடு எங்குள்ளது என்று ஆணையரிடம் காட்டி அதை ஆணையர் அறிக்கையில் குறிப்பிடுமாறு கேட்டுக்கொண்டோமா என்றால் காட்டினோம் ஆணையர் கருத்தில் கொள்ளவில்லை. ஆணையர் அறிக்கையில் 2ம் இலக்க சொத்திற்கு கிழக்கில் கோவிந்தக்கோனார் வீடும், நிலமும் உள்ளது என்பதை எனது வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வுசெய்து ஆணையர் அறிக்கையில் தெரிவித்திருப்பதால் நான் ஆணையர் அறிக்கைக்கு எதிராக மீண்டும் ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு அவர் அறிக்கையை திருத்தி கொடுக்குமாறு கமிஷனர் வாரண்டை திருப்பி வழங்கும்படி கேட்டு நீதிமன்றத்தில் மனு எதுவும் போடவில்லை என்றால் சரிதான் ஆணையர் எங்கள் பத்திரத்தில் உள்ள 2ம் இலக்க சொத்திற்கு கிழக்கே கோவிந்தக்கோனார் குடியிருந்ததாக ஆணையர் சரியாக சொல்லியிருப்பதால் வாரண்டை திருப்பிக்கொடுப்பதற்கு கேட்கவில்லை. இந்த வழக்கில் வா.சா.ஆ.2 ஆவணமானது 22.06.1922ம் தேதி சின்னக்குட்டி அம்மாளுக்கு செல்லச்சாமி தேவரால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் லட்சுமி அம்மாளால் எனது தகப்பனார் சேதுகோனாருக்கு எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1 மற்றும் 2வது இலக்க சொத்துக்களின் மேற்கு எல்லை தில்லைமுத்து கோன் நிலம் மற்றும் 1வது இலக்க சொத்து போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல தில்லைமுதது கோன் நிலம் மற்றும் தென்வடல் பாதை என்று

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2024.11.25 18:10:53 +0530

போடப்பட்டுள்ளது. அதே ஆவணத்தில் வடக்கு எல்லையாக தில்லைமுத்து கோன் வகையறா வீடு என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்துக்களின் மேற்கு எல்லை காளிமுதது கோன், சுப்பையா கோன் மற்றும் தென்வடல் முட்டுப்பாதை என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் கிழக்கு எல்லை கோவிந்தக்கோனார் வீடு கட்டியிருக்கும் இடத்திற்கும் மேற்கு என்று போட்டுள்ளது என்றால் சரியல்ல. 1வது இலக்க சொத்து அது வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிழமேல் 45 அடி எனவும், தென்வடல் 41 அடி எனவும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் அடி கணக்கு தவறாக உள்ளது நான்குமால் சரியாக உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கிழமேல் 45 அடி எனவும், தென்வடல் 55 அடி எனவும் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் தவறுதலாக போடப்பட்டுள்ளது ஊர் பஞ்சாயத்து முன்னிலையில் சரி செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் படி அதன் நான்குமால் ஸ்தலத்தில் நிர்ணயம் செய்யும்போதும், நீள, அகல அளவுகளும் மாறுபட்டு காணப்படுகிறது என்றால் சரியாகத்தான் சொல்லப்பட்டுள்ளது அந்த மாதிரி வாசகம் எதுவும் இல்லை. மாறுபட்டு இருந்தபோதும் ஆணையர் நான்குமால் அளவுப்படி பார்வையிட்டும, கேட்டறிந்தும் அந்த இடங்களை அடையாளம் கண்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான் பத்திரப்படி உள்ள இடம் சர்வே எண்.240/2ல் உள்ளது என 2வது இலக்க சொத்தை ஊர்ஜிதப்படுத்தியுள்ளார். இந்த வழக்கை நான் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளேன் ஆனால் தாவா சொத்திற்கு எனது சகோதரிகளிடம் பவர் பத்திரம் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அந்த பிராதில் என்னுடைய நலனுக்காகவும், சகோதரிகளின் நலுனுக்காகவும் என்று குறிப்பிட்டுள்ளேன்.தாவா சொத்தில் சாலை அமைக்க கூடாது என்று 2ம் பிரதிவாதியிடம் ஆட்சேபனை செய்ததாகவும், அதற்கு 2ம் பிரதிவாதி என்னை மிரட்டியதாக சொல்லியிருப்பது பொய்யாக வழக்கு தாக்கல் செய்வதற்கு சொல்லப்பட்ட வழக்கு மூலம் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி அவசியமில்லாமல் சேர்த்துள்ளதாகவும், அவசியமாக சேர்க்கவேண்டிய தரப்பினர்களை சேர்க்காததாலும் வழக்கு தாக்கல் செய்தது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2024.11.25 18:10:59 +0530